# 8 உயிர்ப்புக்கு சான்று பகர்தல்

அளப்பரிய அன்பின் நிமித்தமாக ஆண்டவர் இயேசு எமது பாவங்களுக்காக மரணத்தை ஏற்று மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நாம் அந்த நாளை ‘‘பாஸ்கா’’ என அழைக்கின்றோம். இது எமது வெற்றியின் நாளாகும்.

இயேசுவின் உயிர்ப்பைக் கண்ட சீடர்களும் பெண்களும் பயமின்றிச் சான்று பகர்ந்தனர்.




மகதலா மரியாவும் யோவன்னாவும் யாக்கோபின் தாயாகிய மரியாவும் கேட்ட செய்தியை திருத்தூதர்களுக்கு கூறினார்கள். அவர்களால் அதை நம்ப முடியாமல் இருந்தது. உடனே பேதுரு கல்லறைக்கு ஓடிச் சென்று குனிந்து பார்த்தான். உடலை சுற்றி இருந்த துணியைக் கண்டு வியப் படைந்தான். வெறுமையான கல்ல றையைக் கண்ட பேதுரு விசுவா சத்துடன் திரும்பிச் சென்றான்.



8.1 இயேசு பெண்களுக்கு காட்சியளித்தல்

பெண்கள், பேதுரு போன்று எம்மாவூர் சென்ற சீடர்களுக்கும் இயேசு காட்சியளித்தார்.

## எம்மாவூர் பயணம்






படம் 8.2 எம்மாவூர் பயணம்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வைப்பயிற்சி புத்தகத்தில் உரையாடலாக எழுதுங்கள்.

லூக்கா 24:17 ⟶ லூக்கா 24:18
லூக்கா 24:19 ⟶ லூக்கா 24:20-24
லூக்கா 24:25-27 ⟶ லூக்கா 24:28-29

எம்மாவூருக்கு சென்ற கிலெயோப்பாவும் மற்ற சீடனும் வழியே உரையாடிக் கொண்டு சென்றவேளையில் இயேசுவும் அவர்களுடன் நடந்து சென்றார். ஆனால் அவர்களால் இயேசுவை அறிந்து கொள்ள முடிய வில்லை. கலக்கமடைந்து காணப்பட்ட சீடர்களுக்கு இறைவாக்கினரால் எழுதப் பட்டிருந்த செய்திகளை இயேசு எடுத்துரைத்தார். மோசே முதல் இறைவாக்கினர் வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக்குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். அவர்களது உள்ளம் உருகியது. உடன் சென்ற இயேசுவை உணரவில்லை. இயேசு பந்தியில் அமர்ந்து அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி அவர்களுக்கு பிட்டு கொடுத்தார். அவ்வேளையில் அவர்களது இருள் நிறைந்த உள்ளம் ஒளியான இயேசுவை அடையாளம் கண்டது. இயேசு இறுதி திருவிருந்தில் அப்பத்தையும் திராட்சைப்பழ இரசத்தையும் வழங்கிய நிகழ்வு அவர்கள் மனதில் உதித்திருக்கலாம்.

அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப்போய் ''ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார்.'' என சான்று பகரத் தொடங்கினர்.

மேலும் சீடர்கள் சிலர் பேசிக்கொண்டிருந்த போது இயேசு அவர்கள் நடுவில் தோன்றி ''உங்களுக்கு அமைதி உரித்தாகுக!'' என்று வாழ்த்தினார். அவர்கள் அமைதியும் மகிழ்வும் அடைந்தனர். சில சீடர்கள் உயிர்த்தெழுதலை நம்புவதற்கு அடையாளம் தேடினார்கள். இயேசு தமது கைகளையும் கால்களையும் காட்டி தான் இயேசு என்பதை உறுதிப்படுத்தினார்.

**உங்கள் உள்ளத்தை சோதித்து பாருங்கள் உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்?**

* இயேசு தமது சீடர்களிடம் கைகளையும் கால்களையும் தொட்டு பார்த்து விசுவாசிக்குமாறு கூறினார்.

நீங்கள்

**அதே போன்று, விசுவாசக் குறைவால் பலவற்றை விசாரித்து அறிந்து மட்டுமே விசுவாசம் கொள்வீர்களா? துன்பங்கள், பிரச்சினைகள் முன்னால் அற்புதங்களும் அடையாளங்களும் தேடி அலைகின்றீர்களா?**

* எம்மாவூருக்கு சென்ற சீடர்களுக்கு இயேசு தம்மைப்பற்றி இறை வாக்கினர்களால் எழுதப்பட்ட இறைவாக்குகளை கூறியும் அவர்களால் அவற்றை அறிந்து கொள்ளமுடியவில்லை.

நீங்கள்

**இறைவார்த்தையை வாசித்து, இறை செய்திகளை கேட்டு அவற்றை அறிந்து அதற்கேற்ப வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றீர்களா?**

* இயேசுவின் துன்புறுதல் மரணம், உயிர்ப்பு, பணிகள் அனைத்தையும் மறந்து செயற்பட்டனர்.

நீங்கள்

**இறைவார்த்தைகளின் உண்மைகளை மறந்து செயற்படுகின்றீர்களா?**

***உங்களது தவறுகள் உள்ளத்தின் சிந்தனைகள் செயல்கள் அனைத்தையும் மாற்றி அமைக்கும் காலம் மலர்ந்துள்ளது.***

அன்று கலங்கி நின்ற சீடர்களுக்கு இயேசு அமைதியை வழங்கினார். இயேசுவைப் பின்பற்றும் எமக்கும் அமைதியையும் ஆறுதலையும் தந்தருள்வாராக!

* ''எனது உயிர்தெழுதலை காணாமல் நம்புவோர் பேறு பெற்றோர்'' என இயேசு கூறியுள்ளார். எமது பலவீனம் மற்றும் பெறுமதியற்ற தன்மைகளை பாராது அவரது பிரசன்னத்தை நாம் உணரச்செய்கின்றார்.

* இயேசுவின் உயிர்ப்பால் எமக்கு நிலைவாழ்வு கிடைத்துள்ளது.

* இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர முதலாவதாக எமது விசுவாசத்தை வளர்க்க வேண்டும். வாழ்வின் பிரச்சனைகளுக்கு முன்னால் அடையாளங்களையும் அற்புதங்களையும் தேடாது இயேசுவில் மட்டும் விசுவாசம் வைத்து வாழ வேண்டும்.

* வாழ்வில் தீர்மானம் எடுக்கும் எச்சந்தர்ப்பத்திலும் இறைவிருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்வோம். ஆண்டவர் இயேசுவின் போதனைகளுக்கு ஏற்ப செயற்படுவோம்.

* இயேசுவை பின்பற்றி செயற்படும்போது எதிர்நோக்கும் சவால்களைப் பொறுத்து அவருக்கு உகந்தவைகளை மட்டும் நிறைவேற்றுவோம்.

*  இயேசுவுக்கு உகந்தவர்களாய் வாழ்ந்து வாழ்வில் அவர் பிரகாசிக்க உள்ளங்களை திறந்திடுவோம்.

**விசுவாசத்தை வளர்த்து சான்று பகர்வோம்.**

**மனனவசனம்:**

***1 திமொத்தேயு 2 : 6***

**அனைவரின் மீட்புக்காக அவர் தம்மையே ஈடாகத் தந்தார். குறித்த காலத்தில் அதற்குச் சான்று பகர்ந்தார்.**

செயற்பாடு

1. இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர கிறிஸ்தவராகிய உமது வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும்?
2. கிறிஸ்தவ நற்செய்தியை பிறருக்கு அறிவிப்பதற்கு நீர் எடுக்கக் கூடிய மூன்று செயற்பாடுகள் எழுதுக.